**SC NO.27/2019** **Date:06.03.2025**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )**

**சாட்சியாகிய திரு. ரவிகுமார் என்ற Pw17 நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10 விதியின் Tr.A.Pachaiyappan, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்**

**செய்யப்படுகிறது.**

**பெயர் - திரு. ரவிகுமார்**

**க/பெ, - திரு. நாகராஜன்**

**வயது - 56/2025**

**தொழில் - ஆய்வாளர் (லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது சென்னை லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் எடுத்துஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் இதற்கு முன்பு டி 14 மாங்காடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது 29.3.2017 அன்று நதியா என்பவர் காவல் நிலையம் ஆஜராகி தன் கணவரை காணவில்லை என்று கொடுத்த புகாரின் அடிப்படையில் உதவி ஆய்வாளர் ஆனந்த் குமார் என்பவர் நிலை குற்ற எண் 674/2017ல் ஆளை காணவில்லை என்ற பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வைத்திருந்தார். 30.3.2017 அன்று நான் வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான எண்.2/433 பெருமாள் கோயில் தெரு, மேட்டுக்குப்பம், முகலிவாக்கம் என்ற சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகளை விசாரணை செய்து சாட்சிகள் ரவி மற்றும் அமிர்தலிங்கம் முன்னிலையில் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் காணாமல் போனவரின் புகைப்படத்தை அறிவிப்பு மற்றும் குற்ற ஆவண காப்பகத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்பு 05.04.2017 அன்று நான் மாங்காடு காவல் நிலையத்திலிருந்து பணிமாறுதலில் சென்றுவிட்டேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தயார் செய்த பார்வை மகஜரில் வடக்கு என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. மாதிரி வரைபடத்தில் தார் சாலை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ–1 பார்வை மகஜரில் முகலிவாக்கம், மேட்டுக்குப்பம் தார் சாலை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.16 வரைபடத்தில் ஹரி என்ற பெயர் குறிப்பிடப்ட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜர் சாட்சிகளான ரவி, த/ப.கன்னியப்பன், 2வது சாட்சி அமிர்தலிங்கம் என்று உள்ளது என்றால் சரிதான். ரவியின் கு.வி.ந.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் திசைகளை குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் அவரை 30.03.2017ல் விசாரணை செய்தேன். நான் ரவியை 30.03.2018ல் விசாரணை செய்துள்ளதாக வாக்குமூலத்தில் உள்ளது என்றால் அது தட்டச்சு பிழை ஆகும். நான் யாரோ தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ–16 மாதிரி வரைபடத்தில் முதல் வரைபடம் என்று போட்டுள்ள நிலையில் 2வது வரைபடம் வரையப்படும் என்று முன்பே எனக்கு தெரியுமா என்றால் அதை நான் போடவில்லை. பென்சிலில் போடப்பட்டுள்ளது. அது எனக்கு முன்னரே தெரியாது. அ.சா.ஆ–16 பார்வை மகஜரில் குறிப்பிட்டுள்ள பெருமாள் கோயில் தெரு என்று போடப்பட்டுள்ள நிலையில் பெருமாள் கோயில் காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்படவில்லை. ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் கையொப்பம் செய்துள்ளேன் என்றும் புலன் விசாரணை சட்டப்படி நிலைநிற்கதக்கது இல்லை என்றால் சரியல்ல.